## முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளான ஜூன் 3ம் தேதியை ‘செம்மொழி நாளாக’ நாடெங்கும் கொண்டாடுவோம்!

# 2026ல் கழக ஆட்சி தொடர களப் பணியை தொடங்குவோம்!

## மதுரையில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற கழக பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்!



**மதுரை, ஜூன் 3-**

**மதுரையில் கழகப் பொதுக்குழுக் கூட்டம் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இப்பொதுக்குழுவில் முத்தமிழறி ஞர் கலைஞர் பிறந்த நாளான ஜூன் 3ம் தேதியை ‘செம்மொழி நாளாக’ நாடெங்கும் கொண்டாடுவோம் என்றும் 2026ல் கழக ஆட்சி தொடர களப் பணியை தொடங்கு வோம் என்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க 27 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.**

அத்தீர்மானங்கள் வருமாறு:-

### தீர்மானம் : 1

**முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் பிறந்த நாளான ஜூன் 3-ஆம் நாளை செம்மொழி நாளாக நாடெங்கும் கொண்டாடுவோம்!**

‘உடன்பிறப்பே’ எனும் ஒற்றைச் சொல்லால் நம்மையெல்லாம் ஒருங்கிணைத்து அரவணைத்து அரை நூற்றாண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தலைமை தாங்கி, சோதனைகளிலும் நெருக்கடிகளிலும் தொடர்ந்து வழிநடத்தி, இந்திய அரசியலைத் தீர்மானிக்கும் மாநிலக் கட்சியாக தி.மு.க.வை வலிமைமிக்க இயக்கமாக உயர்த்தியவரும், 5 முறை முதலமைச்சராகப் பொறுப்பேற்று நவீனத் தமிழ்நாட்டைக் கட்டமைத்தவரும், பன்முக ஆற்றல் கொண்ட படைப்பாளியாக-நிர்வாகத்திறன்மிக்கவராக விளங்கிய வருமான முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் வழியில் நடைபெறும் திராவிட மாடல் அரசு கலைஞரின் நூற்றாண்டையொட்டி –

❖ சென்னை கிண்டியில் “கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை”,

❖ மதுரையில் உலகத் தரத்திலான “கலைஞர் நூற்றாண்டு நூலகம்”,

❖ சென்னை கிளாம்பாக்கத்தில் “கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்”,

❖ மதுரையில் “முத்தமிழறிஞர் கலைஞர் பெயரில் உலகத் தரத்திலான ஏறுதழுவுதல் அரங்கம்”,

❖ திருச்சியில் “முத்தமிழறிஞர் கலைஞர் புதிய பேருந்து முனையம்”

– உள்ளிட்ட பல மக்களுக்குப் பயன்தரும் கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டிருப்பதுடன், தம் அண்ணனாம் பேரறிஞர் அண்ணாவிடம் இரவலாக வாங்கிய இதயத்தைத் திரும்ப ஒப்படைத்து, அவர் அருகிலேயே கடற்கரையில் ஓய்வு கொள்ளும் முத்தமிழறிஞர் கலைஞருக்கு, உலகம் திரும்பிப் பார்க்கும் வகையிலான நினைவிடமும், நவீனத் தொழில்நுட்பத்திலான கலைஞர் உலகமும் அமைத்து, சிறப்பு சேர்த்திருப்பதுடன் –

● இல்லத்தரசிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் ‘கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம்’,

● ஏழைகள் ஏற்றம் பெற ‘கலைஞர் கனவு இல்லம் திட்டம்’,

● சாதி பேதமற்ற வகையில், கைவினைக் கலைஞர்களை ஊக்குவிக்க, ‘கலைஞர் கைவினைத் திட்டம்’,

● கும்பகோணத்தில் அமையவுள்ள ‘கலைஞர் பல்கலைக்கழகம்’

– என முத்தமிழறிஞர் கலைஞரின் புகழ் போற்றும்வகையில்பல்வேறுதிட்டங்களைச் செயல்படுத்தி வரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழுக்குச் செம்மொழித் தகுதி கிடைத்திடக் காரணமான முத்த மிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளான ஜூன் 3-ஆம் நாளை செம்மொழி நாளாகக் கொண்டாடவும் – தமிழ்நாடு முழுவதும் 102 இடங்களில் முத்தமிழறிஞர் கலைஞரின் சாதனைகளைப் போற்றும் நிகழ்ச்சிகளை நடத்திடவும் ஆவன செய்திருப்பதற்கு இப்பொதுக்குழு தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், தமிழ்நாடு முழுவதும் மாவட்டக் கழகங்கள் தொடங்கி ஒன்றிய – நகர – பேரூர் – பகுதி – வட்ட – கிளைக் கழகங்கள் வரை, “முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளில்” அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி புகழ் வணக்கம் செலுத்தி, கழகக் கொடியேற்றி எழுச்சியுடன் கொண்டாடி, மக்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கிட இப்பொதுக் குழு தீர்மானிக்கிறது.

### தீர்மானம் : 2

**மக்களின் பேராதரவுடன் தொடர் வெற்றி நாயகராகத் திகழும் கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்குப் பாராட்டுகள்!**

இன்றைய இந்திய அரசியல் களத்தில் ஏறத்தாழ 60 ஆண்டுகால பொதுவாழ்வுக்குரிய கட்சித் தலைவராகவும், திராவிட முன்னேற்றக் கழகம் எனும் பேரியக்கத்தில் கழகத் தொண்டர், வட்டப் பிரதிநிதி, பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர், மிசா சட்டத்தின்கீழ் அரசியல் கைதி, இளைஞரணி மாநில அமைப்பாளர் – செயலாளர், கழகத் துணைப் பொதுச் செயலாளர், கழகப் பொருளாளர், கழகச் செயல் தலைவர், கழகத் தலைவர் எனக் கழகத்தில் படிபடியாக வளர்ச்சி பெற்றவரும், மக்கள் பணியில் – சட்டமன்ற உறுப்பினர், சென்னை மாநகர மேயர், உள்ளாட்சித் துறை அமைச்சர், துணை முதலமைச்சர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், இன்று தமிழ்நாடு முதலமைச்சர் என மக்களின் ஆதரவுடன் பல்வேறு அரசியல் வளர்ச்சிப் படிக்கட்டுகளைத் தொட்டவரும் கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்றது முதல் எதிர்கொண்ட 2019 நாடாளுமன்றத் தேர்தல், 2020 ஊரக உள்ளாட்சித் தேர்தல், 2021 சட்டமன்றத் தேர்தல், 2022 நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல், 2024 நாடாளுமன்றத் தேர்தல், இடைத் தேர்தல் களங்கள் என அனைத்திலும் மகத்தான வெற்றியைக் கழகம் பெற்றிடும் வகையில் வியூகத்தை வழங்கி, அந்த வெற்றிக்கு ஓயாது உழைத்திட்டவரும், தமிழ்நாட்டு மக்களின் பேராதரவுடன் முதலமைச்சர் பொறுப்பை ஏற்று, இந்தியாவுக்கே முன்னோடியான திட்டங்களைத் தமிழ்நாட்டில் செயல்படுத்தி வருபவருமான கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, இந்தப் பொதுக்குழு தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், எதிர்வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் கழகக் கூட்டணி முழுமையான வெற்றி பெற்று, கழகத் தலைவர் அவர்கள் தொடர்ந்து முதலமைச்சர் பொறுப்பேற்க நாம் அனைவரும் அயராது உழைப்போம் என இப்பொதுக் குழு உறுதியேற்கிறது.

### தீர்மானம் : 3

**இந்தியாவுக்கே முன்னோடியாக மகளிர் வாழ்வை மேம்படுத்தும் திராவிட மாடல் அரசு!**

திராவிட இயக்கத்தின் முதல் அரசியல் அமைப்பான நீதிக்கட்சியின் ஆட்சியில் பெண்களுக்கு வாக்குரிமை, சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டதில் தொடங்கி முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக்காலத்தில், பெண்களுக்குக் காவல்துறையில் பணிகள், குடும்பச் சொத்தில் சம உரிமை, அரசுப் பணிகளில் இட ஒதுக்கீடு, மகளிர் சுயஉதவிக் குழுக்கள், உள்ளாட்சி அமைப்புகளில் மகளிருக்கான இட ஒதுக்கீடு என்று பெண்கள் சமூகத்திலும் பொருளாதாரத்திலும் விடுதலையுடன் வளம் பெறுவதற்கான திட்டங்கள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றது முதல் பேருந்துகளில் மகளிர், மாணவிகள், மாற்றுத் திறனாளிகள், திருநர்கள் ஆகியோருக்கு கட்டணமில்லா விடியல் பயணம், 1.14 கோடி இல்லத்தரசிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், பெண்களுக்கு மானியத்துடன் இளஞ்சிவப்பு (பிங்க்) ஆட்டோ, புதுமைப் பெண் திட்டம், அரசுப் பணிகளில் பணியாற்றும் பெண்களுக்கு மகப்பேறு விடுப்பு ஓராண்டு, பணியாற்றும் பெண்களுக்குத் தோழி விடுதி, வேலைக்குச் செல்லும் பெண்களின் குழந்தைகள் தங்கிட 17 சிப்காட் தொழிற்சாலைப் பூங்காக்களில் குழந்தைகள் காப்பகம், சுயஉதவிக்குழு சகோதரிகள் தயாரிக்கும் பொருட்களை எடுத்துச் செல்ல இலவசப் பயணத் திட்டம், மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் பதிவு செய்தவர்களுக்குக் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற முன்னுரிமை, கோ-ஆப்டெக்ஸ் பொருட்களுக்கு 5 விழுக்காடு தள்ளுபடி, மகளிருக்கு ஆவின் தயாரிப்புப் பொருட்கள் குறைந்த விலையில் விற்பனை, இ-சேவை மையங்களில் 10 விழுக்காடு சேவைக் கட்டணம், மற்றும் சமூகநீதித் திட்டங்கள் போன்ற எண்ணற்ற சமூக நலத்திட்டங்களைக் கொண்டு வந்து மகளிரின் வாழ்வை மேம்படுத்தி, இந்திய அளவிலான பெண் பணியாளர்களில் தமிழ்நாட்டுப் பெண்கள் 42% என்கிற சாதனையையும் படைத்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இப்பொதுக்குழு பாராட்டு தெரிவித்துக் கொள்கிறது.

### தீர்மானம் : 4

**உழவர்கள் – நெசவாளர்கள் – மீனவர்கள் என அனைத்துத் தரப்பினரின் வாழ்விலும் புதிய விடியல் தந்த திராவிட மாடல் அரசின் சாதனைகளைப் பரப்புவோம்!**

உழவர்கள் மீதான உண்மையான அக்கறையோடு திராவிட மாடல் அரசு செயல்படுவதால்தான், ஆட்சிப் பொறுப்பேற்றதுமே வேண்மைக்கெனத் தனி நிதிநிலை அறிக்கையை வெளியிட்டது. இதனைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் பாசனப் பரப்பு அதிகரித்தும், விளைச்சல் மற்றும் கொள்முதல் ஆகியவை அதிகரித்தும் ஓராண்டை மற்றொரு ஆண்டு மிஞ்சும் வகையிலான சாதனைகளைப் படைத்தும் வருகிறது.

கடந்த ஆட்சிக்காலத்தில் உழவர்கள் எத்தகைய துயர்களையெல்லாம் எதிர்கொண்டார்கள் – எத்தனை எத்தனை உழவர்கள் தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டார்கள் என்பதை நாடறியும். ஆனால், திராவிட மாடல் ஆட்சியில், இயற்கை பொய்க்காத மழை பொழிவு மற்றும் திட்டங்களாலும் – முன்னெடுப்புகளாலும் – சிறந்த திட்டமிடல்களாலும் கடந்த நான்காண்டுகளில் குறிப்பிட்ட நேரத்தில் மேட்டூர் அணையைத் திறந்து, உழவர்களின் நலனைப் பாதுகாத்திருக்கிறது. இந்த ஆண்டும், வருகின்ற ஜூன் 12-ஆம் நாள் மேட்டூர் அணையைத் திறந்து வைக்கவுள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

இதுவரையில் வேளாண்மைக்கெனத் தனியாக 5 நிதிநிலை அறிக்கைகள் சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, நெல் – கரும்பு – பருத்தி – எண்ணெய் வித்துகள் – பயறு வகைகள் உள்ளிட்ட அனைத்து வகை தானியங் களின் உற்பத்தியை மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருவதுடன் வேளாண்மைக்கு ஆதாரமான நீர் மேலாண்மையில் கவனம் செலுத்தி, நவீன கருவிகள் வழங்கப்பட்டு, பணப் பயிர் வேளாண்மை, இயற்கை வேளாண்மை, கால்நடைகள் வளர்ப்பு என அனைத்தையும் மேம்படுத்தி சிறந்த உழவர்களுக்கு விருதுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

உழவர்களின் கோரிக்கைகளுக்குச் செவிமடுத்து நலன் காக்கும் திராவிட மாடல் அரசு நெசவாளர்களின் வாழ்விலும் வெளிச்சம் பரவும் வகையில், கடந்த 4 ஆண்டுகளில் ஈரோடு, கரூர், விருதுநகர், மதுரை, தஞ்சாவூர் ஆகிய பகுதிகளில் கைத்தறி – விசைத்தறி மேம்பாட்டிற்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியிருப்பதுடன், இளைய தலைமுறையினரைக் கைத்தறித் தொழிலில் தொழில் முனைவோராக்கும் வகையில் 10 சிறிய கைத்தறிப் பூங்காக்கள் அமைத்திடவும், கோ-ஆப்டெக்ஸ் மூலமாக நெசவாளர்களின் திறன்களை மேம்படுத்தவும், விசைத்தறி உற்பத்தித் திறனை அதிகரிக்க மின்னணுப் பலகைகள் நிறுவ மானியம் வழங்கியும், நெசவாளர்களுக்கான இலவச மின்சாரத்தை 300 யூனிட்டாக உயர்த்தியும், பட்டு நெசவு உற்பத்திக்கான கட்டமைப்புகளை மேம்படுத்தியும் மனிதர்களின் மானம் காக்கும் நெசவாளர்கள் தங்கள் வாழ்வை சிறப்பாக அமைத்துக் கொள்ளும் வகையில் பல சாதனைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருக்கிறது.

அதேபோல், தமிழ்நாடு மீனவர் நலவாரியம் வாயிலாக 19,997 பயனாளிகளுக்குப் பல்வேறு நிவாரணம் மற்றும் உதவித் தொகை திட்டங்களின்கீழ் ரூ.25.68 கோடியை வழங்கியதுடன், கடந்த

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பாராட்டு!



**கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்றது முதல் எதிர்கொண்ட 2019 நாடாளுமன்றத் தேர்தல், 2020 ஊரக உள்ளாட்சித் தேர்தல், 2021 சட்டமன்றத் தேர்தல், 2022 நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல், 2024 நாடாளுமன்றத் தேர்தல், இடைத்தேர்தல் களங்கள் என அனைத்திலும் மகத்தான வெற்றியைக் கழகம் பெற்றிடும் வகையில் வியூகத்தை வழங்கி, அந்த வெற்றிக்கு ஓயாது உழைத்திட்டவரும், தமிழ்நாட்டு மக்களின் பேராதரவுடன் முதலமைச்சர் பொறுப்பை ஏற்று, இந்தியாவுக்கே முன்னோடியான திட்டங்களைத் தமிழ்நாட்டில் செயல்படுத்தி வருபவருமான கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு, இந்தப் பொதுக்குழு தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், எதிர்வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் கழகக் கூட்டணி முழுமையான வெற்றிபெற்று, கழகத் தலைவர் அவர்கள் தொடர்ந்து முதலமைச்சர் பொறுப்பேற்க நாம் அனைவரும் அயராது உழைப்போம் என இப்பொதுக்குழு உறுதியேற்கிறது.**

## தமிழினத்திற்குப் பெருமை சேர்த்த தலைவர்களைப் போற்றும் கழக அரசுக்குப் பாராட்டு!